**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, THIRUMANGALAM**

O.S No.51/2014

P.W.1 – சாட்சி. சரவணக்குமார், த.பெ.கந்தவேல்

Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 28.07.2026 in accordance with the provisions of Act XX141.

4 முதல் 6, 8 முதல் 14 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

என் பாட்டி எத்தனை இலக்க சொத்துகளுக்கு தானபத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் 6 இலக்க சொத்துக்களுக்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி 6 இலக்க சொத்தில் நான் எத்தவை இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 இலக்க சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மீதமுள்ள 2 இலக்க சொத்திற்கு ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் தானசெட்டில்மெண்ட் படி நான் முருகேசன் மனைவி தமிழ்செல்வி என்பவருக்கு கிரையம் கொடுத்ததால் அதற்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி தமிழ்செல்விக்கு கிரையம் கொடுத்த சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எந்த வருடம் நான் தமிழ்செல்விக்கு கிரையம் கொடுத்தேன் என்றால், தற்போது ஞாகமில்லை.

2 இலக்க சொத்தை பொறுத்து நான் தனிப்பட்ட முறையில் கிரையம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி 2 இலக்க சொத்தை என் பாட்டி, என் அத்தை இரண்டு வேலம்மாள், சிவகாமியம்மாள் மற்றும் நான், என் உடன்பிறந்த சகோதரிகள் ஆகியோர்கள் இணைந்து கிரையம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் தமிழ்செல்விக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தை பார்வையிட்டால் நான் தனியாக கிரையம் எழுதிக்கொடுத்தேனா, என்னுடன் சேர்ந்து என் குடும்ப நபர்களும் எழுதிக்கொடுத்த விபரம் தெரிய வரும் என்றால், நான் தனியாக கிரையம் கொடுத்ததால் எனக்கு அதுபற்றி தெரியாது.

என்னிடம் காட்டப்படுவது தான் தமிழ்செல்விக்கு நான் எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால், எனக்கு எழுத, படிக்க தெரியாது. நான் தமிழ்செல்விக்கு பவர்பத்திரம் எழுதிக்கொடுத்தேனா அல்லது கிரைய ஆவணமாக எழுதிக்கொடுத்தேனா என்றால், பவர் ஆவணம் என்று கூறினார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட எத்தனையாவது கண்ட சொத்தை பொறுத்து நான் தமிழ்செல்விக்கு பவர் ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் 5 மற்றும் 6 வது சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்தேன். நான் தமிழ்செல்விக்கு பவர் பத்திரமா அல்லது கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தேனா என்றால் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன். பத்திர பதிவு அலுவலகத்திற்கு நான் மட்டும் சென்றேனா அல்லது குடும்ப நபர்களும் வந்தார்களா என்றால் நான் மட்டும் தான் சென்றேன். 20.06.2012ம் தேதியிட்ட தமிழ்செல்விக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்திலுள்ள புகைப்படங்களில் என்னுடைய புகைப்படம் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பத்திரம் மோசடி பத்திரம் இல்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை தனிப்பட்ட முறையில் எழுதிக்கொடுப்பதற்கு என் பாட்டிக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் அவர் மூலமாக எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்த பின்னர் தான் தமிழ்செல்விக்கு நான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தை எழுதிக்கொடுத்த பின்னர் எனது பாட்டி வா.சா.ஆ.1 பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான், அது செல்லாது. பின்னர் 7ம் பிரதிவாதியான வேலாயுதம்மாளுக்கு என் பாட்டி கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் கிரையம் கொடுத்துள்ளார். பின்னர் 7ம் பிரதிவாதியை வழக்கு முன்னர் சேர்த்தோமா அல்லது பின்னர் சேர்த்தோமா என்றால், வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது 7ம் பிரதிவாதி மனு செய்து தரப்பினராக சேர்ந்தார்.

தாவா சொத்தை கிரையம் வாங்கியதால் தன்னையும் தரப்பினராக சேர்க்க சொல்லி மனு செய்து 7ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்த பின்னர் 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய ஆவணத்தை பொறுத்து செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். திருமங்கலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.198/2021 பிராதின் நகலை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 7வது இலக்கமாக ஒரு சொத்தானது காட்டப்பட்டு பின்னர் அடிக்கப்பட்டுள்ளது என்றால் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. 7வது இலக்க சொத்து எங்கேயுள்ள சொத்து என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் பத்திரம் எங்கு உள்ளது என்றால், எனக்கு சரியாக தெரியவில்லை, வீட்டில் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு வீட்டில் உள்ள வா.சா.ஆ.1 ன் அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எனது பாட்டி ரத்து செய்தவுடனே அசல் ஆவணத்தை எனது பாட்டியிடம் நான் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. இரத்து செய்து எத்தனை நாட்களுக்கு பின்னர் நான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால், 2013ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது, நான் எனக்கு தெரிந்த உடனே இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். அசல் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால், வழக்கறிஞர் கோரவில்லை அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட 3வது இலக்க சொத்தில் சர்வே எண்.61/1ல் விஸ்தீரணம் என்ன என்றால் 1 ஏக்கர் 62 சென்ட்டாகும். மேற்படி 1 ஏக்கர் 62 சென்ட்டானது எனது தானத்திற்கு முன்பு யாருக்கு பாத்தியம் என்றால் கருப்பாயியம்மாளுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது. மேற்படி 1 ஏக்கர் 62 சென்ட்டில் கருப்பபிள்ளைக்கு 67 சென்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

மீதமுள்ள 94 செண்ட் பெரியகருப்பனுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி 94 செண்ட பெரியகருப்பனுக்கு பாத்தியம் என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில் அதுகுறித்து நகல் எடுத்து சரிபார்த்தேனா என்றால், சரி பார்த்தேன், அது பொய்யானது. எதன் அடிப்படையில் பொய்யானது என்று கூறுகிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நகல் எடுத்து பார்த்த விபரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்யாமல் இருக்க காரணம் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுக்க என் பாட்டிக்கு உரிமையில்லை என்பது தெரியவரும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 7ம் பிரதிவாதியான வேலாயுதம்பிள்ளை தாவா சொத்துக்களை வேறு நபர்களுக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான், அது தவறானது. 7ம் பிரதிவாதியான வேலாயுதம்பிள்ளை கொடுத்த கிரையம் கொடுத்த நபரை இந்த வழக்கில் 14ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சேர்க்கப்பட்டுள்ளது.

14ம் பிரதிவாதி வாங்கிய கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்று நான் பரிகாரம் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது. 8 மற்றும் 9 பிரதிவாதிகள் யார் என்றால் எனக்கு யார் என்று தெரியாது. கருப்பபிள்ளை மற்றும் என் பெயரில் கூட்டு பட்டா உள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் என் பிராதில் தாவா சொத்தில் என் பெயரிலும், கருப்பபிள்ளை பெயரிலும் கூட்டு பட்டா உள்ளதாக கூறியுள்ளேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா 3வது இலக்க சொத்தை பொறுத்து கருப்பபிள்ளை சொத்துக்களை தான் முத்தையாவும் அவருடைய மக்களும் 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் போது என் பாட்டி யாருடன் இருந்தார்கள் என்றால், என் அத்தையின் வீட்டில் தான் இருந்தார்கள்.

நான் வழக்குரையில் என் பாட்டி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் வரை என்னுடன் தான் இருந்தார் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 1, 2, 4 சொத்துக்களை பொறுத்து எனது பாட்டிக்கும், எனது தாத்தா பெரியகருப்பனுக்கும் கூட்டாக கிரைய பாத்தியப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல, எனது பாட்டிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்துகள் கிரையம் வாங்கிய நபர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள சொத்தை அரசாங்கம் எதுவும் அனுபவம் செய்கிறதா என்றால், நான்குவழி சாலைக்காக நிலம் எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் எந்ததெந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்தை அனுபவம் செய்கிறது என்றால், எனக்கு சரியாக தெரியாது. அரசு தரப்பில் நிலத்திற்கு இழப்பீடு தொகையை எனக்கு கொடுக்கவில்லை என்றால், சரிதான், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய சொல்லி மனு கொடுத்துவிட்டேன். வழக்கு நிலுவையில் இருப்பதால் இழப்பீடு தொகையை நான் வாங்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டதா அல்லது வழக்கு தாக்கல் செய்த பின்னர் கையகப்படுத்தப்பட்டதா என்றால், வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் கையகப்படுத்தப்பட்டது. அரசாங்கம் கையப்படுத்தப்பட்ட பகுதியை நான் இந்த வழக்கில் இருந்து நான் நீக்கவில்லை என்றால், வழக்கு முடிந்த பின்னர் தான் நீக்க முடியும். அதனால் அந்த பகுதியை இந்த வழக்கில் நீக்கவில்லை என்றால் சரிதான். அரசாங்கத்தால் எவ்வளவு பணம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து கிரையம் வாங்கிய 3ம் தரப்பினரை பொறுத்து அரசின் இழப்பீடு தொகையை பெறுவதற்காக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சிவகாமி, ராஜ்குமார், ராஜேஸ்வரி ஆகியோர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அத்தை மக்கள் ஆவார்கள். 1 முதல் 4 இலக்க சொத்துகளை பொறுத்து மேற்படி நபர்களும் என்னுடன் சேர்த்து முருகேசன் என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தானபத்திரம் ரத்து செய்வதற்கு சட்டபடி எனது பாட்டிக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதுவதற்கு முன்னரே எனது பாட்டி என் பெயரில் ஒரு உயில் எழுதிவைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயிலிலும் என் பாட்டியின் ஆயுளுக்கு பின்னர் நான் அடைந்துகொள்ள வேண்டியது என்று குறிப்பிட்டு எழுதிவைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி உயிலை என் பாட்டியை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயில் இருக்கும் போதே நான் சொத்திற்கு பட்டா வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தபடுவதற்கு முன்னரே தாவா சொத்துகளை பொறுத்து என் பெயரில் பட்டா வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல.

மேற்படி பட்டா வாங்குவதற்கு வருவாய்துறை அதிகாரிகளால் விசாரணை நடைபெற்றதா என்றால், நடைபெறவில்லை. மேற்படி விபரத்தை எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில் அதை மறுத்து நான் எந்தவித வாதமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே நிலம் கையகப்படுத்தபட்டுள்ளது என்பதால் நான் இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராத நிலையில் எனது வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பொறுத்து மட்டும் செல்லாது என பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும், பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அழைகழிப்பு செய்ததால் பிரதிவாதிகளுக்கு நான் நஷ்ட ஈடு செலவு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள வழக்குமூலம், சொத்து விபரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.7 வரையில் உள்ள ஆவணங்கள் நான் கோரும் பரிகாரத்திற்கு உதவாது என்றால் சரியல்ல.

**4 முதல் 6, 8 முதல் 14 வரை பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை மற்ற பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.07.28 18:28:16 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.